3rd December 1970]

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலையை மாற்றியமைப்பதற்காக, ஆலைகளுக்குப் போதிய பஞ்சு கிடைக்கக்கூடிய வழி வகைகளைக் காண்பதற்காகச் சில முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே ஒரு முயற்சி, இன்றைக்குச் செய்தியாக வந்திருப்பதாக மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட சட்டமோ, கட்டுப்பாடோ வருமானால், அது எந்த அளவுக்கு ஆலைகளுக்குச் சாதகமாக இருக்கும் அல்லது பாதகமாக இருக்கும் என்பதையெல்லாம் மத்திய அரசாங்கம் பரிசீலிக்கும் என்று நான் நம்புகிறேன். ஆலைகளுக்குப் பஞ்சு தடங்கல் இல்லாமல் கிடைக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு, பஞ்சை சில பேர் பதுக்கி வைக்க இடமிருக்கக் கூடாது என்ற நோக்கத்தோடு, இந்த நடவடிக்கைகள் எல்லாம் எடுப்பதாகத் தெரிகிறது. நிச்சயம் ஆலைகளுக்குப் பாதகமாக எந்த நடவடிக்கையையாவது மத்திய அரசாங்கம் எடுக்குமானால், நமது மாநில அரசு ஆலைகள் சிறந்த முறையில் தடையில்லாமல் நடக்கவும் பஞ்சு கிடைக்கவும் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு ஆவன செய்வதற்குத் தயாராக இருக்கும்.

VI. MOTION FOR SUSPENSION OF RULE 42 OF THE COUNCIL RULES

DEPUTY CHAIRMAN : I move—

"That rule 42 of the Tamil Nadu Legislative Council Rules be suspended with reference to the limitation laid down in sub-rule (3) thereof and that more than one matter under that rule be permitted to be raised today."

The motion was put and carried.

(2) ***Failure of the authorities to disburse salary for the month of October 1970 to the staff of Government Arts College for Women, Madras***

THIRU G. VASANTHA PAI : Mr. Deputy Chairman, I wish to call the attention of the Hon. the Minister for Education to a matter of urgent public importance, namely, the failure of the authorities to disburse the salaries to all the members of the staff of the Government Arts College for Women, Madras for the month of October 1970, and may I add that the salary for the month of November 1970 also has not been paid on 26th November 1970.

மாண்புமிகு திரு. எஸ்.மாதவன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அண்மையில் அக்டோபர் மாதத்திற்குச் சம்பளம் கொடுக்கவில்லை என்று கூறுகிறார். அக்டோபருக்கான சம்பளம் நவம்பர் மாதம் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். நவம்பர் மாதத்திற்குச் சம்பளம் டிசம்பர் மாதம்தான் கொடுக்க வேண்டும். அரசாங்கம் அதைப் பரிசீலித்தது. அந்தக் கல்லூரியில் எல்லோருக்கும் சம்பளம் கொடுக்கவில்லை என்று கூறுவது தவறு. ஏற்கெனவே இருக்கிறவர்களுக்கெல்லாம் கொடுக்கப்பட்டது.